Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 41/2024 PW-2**

Name : பார்த்திபன்
Father / Husband name : எட்டியப்பன்
Village : சாரம்
Age : 35
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 22.09.2025

Accused 1, 2 absent. Petition u/s 317 CrPC filed and allowed. APP present.

**முதல் விசாரணை**

நான் பால் வியாபாரம் செய்கிறேன். அ.சா.1 மஞ்சுளா என்பவர் பக்கத்து தெருவில் இருப்பவர். சாட்சி பொன்னுசாமி என்பவரை எனக்கு தெரியும். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 03.03.2024 அன்று இரவு 9 மணியளவில் நான் பால் வியாபாரம் செய்துவிட்டு வீட்டிற்கு வந்து கை, கால்களை கழுவிக்கொண்டிருக்கும்போது மஞ்சுளா என்பவரின் வீட்டிற்கு அருகே சத்தம் கேட்டு நான் அங்கு சென்று பார்த்தேன். அங்கு மஞ்சுளா அழுதுகொண்டிருந்தர். துரைமோகன் மஞ்சுளாவின் மகளை கடைக்கு சென்று வரும்வழியில் கையை பிடித்து இழுத்து ரகளை செய்தார். அதை அ.சா.1 கேட்டபோது துரைமோகன் அ.சா.1 ஐ கட்டையால் கை, கால், வயிற்றுப்பகுதியில் அடித்ததாக சொன்னார். நான் சென்று துரைமோகனிடம் கேட்டபோது எனக்கு அதுதேவையில்லாத வேலை என்று என்னை திட்டி அனுப்பினார். பின்னர் மஞ்சுளாவும் அவரின் மகளும் வீட்டிற்கு சென்று கதவை மூடிக்கொண்டார்கள்.

2. துரைமோகனும் அவரின் மனைவியும் மஞ்சுளாவின் வீட்டிற்கு சென்று கையிலிருந்து இரும்பு கம்பியால் மஞ்சுளாவின் வீட்டு கதவை உடைத்து அவரை தேவிடியா என்று அசிங்கமாக பேசி உனக்கு பையன் இல்லை என்றால்

என்னிடம் வாடி என்று அசிங்கமாக பேசினார். அதன்பின்னர் நான் வந்துவிட்டேன். மஞ்சுளா காவல் நிலையத்திற்கு போன் செய்து போலிசார் வந்த பிறகு மஞ்சுளா காவல்நிலையம் சென்று சம்பவம் குறித்து புகார் கொடுத்தார். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 41/2024 PW-3**

Name : பாபு
Father / Husband name : மாணிக்கம்
Village : சாரம்
Age : 51
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 22.09.2025

Accused 1, 2 absent. Petition u/s 317 CrPC filed and allowed. APP present.

**முதல் விசாரணை**

நான் விவசாய வேலை செய்துவருகிறேன். சாட்சி செல்வம் என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 06.03.2024 அன்று பகல் 02.30 மணியளவில் நானும் செல்வம் என்பவரும் மஞ்சுளா வீட்டின் அருகே நின்று பேசிக்கொண்டிருந்தபோத ஒலக்கூர் காவல் நிலைய போலிசார் வந்து மஞ்சுளாவிற்கும் துரைமோகனுக்கும் நடந்த சண்டை சம்மந்தமாக விசாரித்து வரைபடம் போட்டு என்னிடமும், செல்வமும் சாட்சி கையொப்பம் செய்தோம். **பார்வை மகசரில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**